### மேயர்.பிரியாராஜன் தலைமை! சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட திரு.வி.க நகர் சட்டமன்றத் தொகுதியில்

# 12-வது நாளாக அமைச்சர் பி.கே.சேகர் பாபு மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம்!

## மக்கள் தேவைகளை கேட்டறிந்தார்!





சென்னை.ஜன.22-

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சென்னை கிழக்கு மாவட்ட கழக நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட கொளத்தூர், அம்பத்தூர், வில்லிவாக்கம், திரு.வி.கநகர், எழும்பூர், துறைமுகம் ஆகிய 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள 44 வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களிலும் மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் பகுதிகள் மற்றும் வார்டுகள் வாரியாக உள்ள பாகங்களில் பொதுமக்கள் தேவைகளை கண்டறியும் சிறப்பு முகாம் நேற்று பன்னிரண்டாவது நாளாக தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிகழ்வில் நேற்று (21.01.2025) காலை 7.30 மணியளவில் திரு.வி.க.நகர் சட்டமன்றத் தொகுதி, 6 வது மண்டலம், வட்டம்-74அ வட்டத்தில் மேயர் திருமதி. பிரியா ராஜன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பகுதிக் கழகச் செயலாளர் செ.தமிழ் வேந்தன் மண்டல குழு தலைவர் சரிதா மகேஷ் குமார் ஆகியோர் முன்னிலையில், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு , திரு.வி.க. நகர் வடக்கு பகுதி, 74-வது வார்டு, ஓட்டேரி, பாஷ்யம் ரெட்டி முதல் மற்றும் இரண்டாம் தெருவில் வசிக்கும் பொது மக்களை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களிடம் குறைகளை கேட்டறிந்து, அப்பகுதியில் சாலையோரங்களிலுள்ள கட்டிடக் கழிவுகளை உடனடியாக அகற்றிடுமாறும், பழுதடைந்த மின்சார பில்லர் பாக்சை மாற்றி புதிதாக அமைத்திடுமாறும், சம்மந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தினார். மேலும் அப்பகுதியில் குற்றச்சம்பவங்கள் ஏற்படாமல் இருக்க சிசிடிவி கேமராவை உடனடியாக பொருத்துமாறு காவல்துறை அலுவலர்களிடம் அறிவுறுத்தி மற்றும் அப்பகுதியில் நடைபெற்றுவரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது, பகுதி துணைச்செயலாளர் பெரம்பூர். ராஜன் வட்டக கழக செயலாளர்கள் ஜி.கிருஷ்ண குமார், எஸ்.புஷ்பராஜ் நிர்வாகிகள் ஆர்.வசந்த், வ.நாமதேவன், ராஜராஜன், எம்.மோகன்ராஜ், விஷ்ணு, விஜயகுமார், சந்தானம்ராஜ், ப்ரீத்தி ராஜேஷ், உமேஷ், மால்கம் வேளாங்கண்ணி, பிரியங்கா, சோனு சிங், மனோஜ், கணேஷ், நவீன், முத்து பாப்பம்மாள், லட்சுமி, சத்யா, ஷகிலா, ராகவன் திருக்குமரன், விஷ்வா ரிஷி ஆகியோருடன் மாநகராட்சி, குடிநீர் வடிகால் வாரியம், மின்வாரிய அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

---

### செங்குன்றம் – பேரூர்

# 6வது வார்டு தி.மு.க. சார்பாக சமத்துவ பொங்கல் விழா!

செங்குன்றம், ஜன.22-

தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.சுதர்சனம் வழிகாட்டுதலின்படி புத்தாண்டு மற்றும் சமத்துவ பொங்கல் விழாவை முன்னிட்டு செங்குன்றம் பேரூர் 6வது வார்டு திமுக சார்பாக கருப்பு ஜெ. ஸ்ரீதர் ஏற்பாட்டில் செங்குன்றம் தேவகி தெருவில் நடைபெற்றது.

மாபெரும் விளையாட்டுப் போட்டிகள், கோலப்போட்டிகள் மற்றும் மகளிர், சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் சிறப்பாக நடைபெற்றது.

வெற்றியாளர்களுக்கு தங்கம் நாணயம் வெள்ளி நாணயம் பரிசு தொகுப்புகளும் போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் இரா.ஏ.பாபு, ஏ.திராவிட மணி, ஆர்.சீனிவாசன், என். சந்திரசேகர், கா.கு. இலக்கியன், திராவிட டில்லி, வி.மதி வாணன், க.பா.சீனிவாசன், அருள்நாராயணன், அக்பர் பாய், பி.எல். சரவணன், முரளி கிருஷ்ணன், என்.ஷாம் கார்த்திக், கேட் வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

இதில் ஆர்.இ.சந்துரு, இ.பாலசுப்பிரமணி, மகேந்திரன், பா.திராவிட நவீன்குமார், எம்.கே.ஜி.ராஜா, எல்.பாண்டியன், ஆர்.ஏ.வி.சீனிவாசன், ஜி.காந்தி கீர்த்தி, ஆர்.ஏ.வி.கண்ணன், ஜெ.சிலம்பரசன், ஆர்.சாம்ராஜ், சி.வி.பால்ராஜ், டி.பால கிருஷ்ணன், ஆர்.மோகன்குமார், யூ.தினகரன், டி.சரத்குமார், ஏ.ஆனஸ்ட் ராஜன், டீ.சரத்குமார், கே.சதீஷ்குமார், சி.கார்த்திக், ஐ.ஏகாந்தன் சூரி, எச்.தேவா, எச்.யோ கேஸ்வரன், எஸ்.தினேஷ், இ.சந்திப் ராஜ், ஏ. பூவரசு, எஸ்.கௌதம், எஸ்.ரவி, வி. சஞ்சய்சிவனேசன், மகளிர் அணியைச் சேர்ந்த எஸ்.துளசி, எஸ்.சுசிலா, எஸ்.ஜமுனா, எச்.முருமா, சி.வனிதா உள்ளிட்ட வார்டு பொதுமக்கள் திரளாக கலந்து கொண்டனர்.

---

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வருகை!

# மதுரவாயல் 91வது வட்ட கழக பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் பங்கேற்பு!

சென்னை,ஜன,22

மொழிப்போர் தியாகிகள் வீர வணக்கநாள் பொதுக் கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார், அது தொடர்பான 91வது வட்டக் கழக பொது உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் இன்று (22-1-2024 புதன்கிழமை) மாலை 5:30 மணியளவில் முகப்பேர் மேற்கு சமுதாய நலக்கூடத்தில் வட்டகழக செயலாளர் MKP. அண்ணாதாசன் தலைமையில் மாமன்ற உறுப்பினர் ஆ. மாலினி முன்னிலையில் நடைபெறவிருக்கிறது.

இக்கூட்டத்தில் மதுரவாயல் வடக்குபகுதி கழக செயலாளர் வளசரவாக்கம் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் கலந்துகொண்டு ஆலோசனைகள் வழங்கவிருக்கிறார். அது போது 25 ந்தேதி வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பங்கேற்பது மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப் படவிருக்கிறது.

ஆகவே 91,வது வட்டகழக நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள், மாவட்ட கழக பிரதிநிதிகள், பகுதிகழக பிரதிநிதிகள், மாவட்டகழக அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பகுதி கழக அணிகளின் அமைப்பாளர்கள்,

துணை அமைப்பாளர்கள்,

மகளிர் அணி சகோதரிகள், இளைஞரணி தம்பிமார்கள், BLA2 பாக முகவர்கள்,கழக பொது உறுப்பினர்கள் கழக முன்னோடிகள், கழக நண்பர்கள் அனைவரும் இந்த ஆலோசனை கூட்டத்தில் தவறாமல் கலந்துகொள்ளுமாறு வட்டச் செயலாளர் எம்.கே.பி.அண்ணாதாசன் கேட்டுக் கொண்டுள்ளார்.

---

### ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தல்:

# தி.மு.கழகத்திற்கு எம்.ஜி.ஆர். கழகம் ஆதரவு!

## பொதுச் செயலாளர் டி.ராமலிங்கம் அறிவிப்பு!

சென்னை, ஜன. 22-

ஈரோடு கிழக்குத் தொகுதி இடைத்தேர்தலில் தி.மு.கழகத்திற்கு எம்.ஜி.ஆர். கழகம் ஆதரவு தெரிவித்துள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பொதுச் செயலாளர் டி.இராமலிங்கம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கடந்த 37 வருடங்களாக மறைந்த எம்.ஜி.ஆர். கழக தலைவர் இராம வீரப்பன் அவர்கள் தமிழகத்தில் நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் திராவிட முன்னேற்றக் கழக கூட்டணிக் கட்சி வேட்பாளர்களைத் தொடர்ந்து ஆதரித்து வந்துள்ளார். அவரது வழியில் எம்.ஜி.ஆர். கழகத்தின் பொதுச் செயலாளர் டி. ராமலிங்கம் அவர்கள் வருகின்ற பிப்ரவரி 5ம் தேதி நடைபெறவுள்ள சட்டமன்ற ஈரோடு கிழக்கு தொகுதியில் போட்டியிடும் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் சந்திரகுமார் வெற்றி பெற முழு ஆதரவை தெரிவித்துள்ளார்.

மேலும் ஈரோடு, சேலம், நாமகல், திருப்பூர் ஆகிய எம்.ஜி.ஆர். கழக மாவட்டச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள் திராவிட முன்னேற்றக் கழக மாவட்டச் செயலாளர்களுடன் தொடர்பு கொண்டு திராவிட முன்னேற்றக் கழக வெற்றிக்கு பாடுபடுமாறு அறிவிக்கப் பட்டுள்ளது என்பதினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு டி.ராமலிங்கம்தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---


